ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, NOVEMBER 14, 2008, ISSUE 105

## அவலங்களை முதலீடாக்கும் சிறிலங்கா

தொடரும் யுத்தமும் அதனால் ஏற்பட்டுவருகின்ற இடப்பெயர்வுகளும் தமீழீழ மக்களின் இயல்பு வாழ்க்கையை முற்றாகக் குழப்பி வருகிறது. பொதுமக்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ள யுத்தத்தால் அவர்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர் நோக்கி வருகிறார்கள். இந்நிலையில் இலங்கைத் தீவில் யுத்தத்தை நிறுத்துமாறு சில தமிழக அரசியல் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு, விடுதலைப் புலிகள் சாதகமான பதிலை வழங்கியுள்ளனர். இது தமிழ் மக்களின் நலனில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையையும், தமிழகத் தலைவர்களின் மீது கொண்டுள்ள நன்மதிப்பையும் வெளிக்காட்டுகிறது.

மறுபுறத்தில் சிறிலங்கா அரசு யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட மறுத்துள்ளதுடன் அதனை இன்னமும் தீவிரப்படுத்தி வருகிறது. யுத்தம் ஒன்றினை மட்டுமே முன்வைத்து ஆட்சி நடாத்துகிற கொழும்பு அரசாங்கம் அதனை நிறுத்துவதற்கு உடன்பட மறுப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதனடிப்படையில் நாட்டின் அடுத்த ஆண்டுக்கான பாதீட்டில், யுத்தத்திற்கான நிதியை 6.5 விழுக்காட்டால் அதிகரித்து 177 பில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திடம் சிறிலங்கா பெற்றுவரும் ஏற்றுமதிக்கான வரிச் சலுகையை (GSP plus) நீடிப்பதற்கு நிபந்தனையாக, மனிதவுரிமை விடயங்கள் பற்றிய விசாரணையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் சிறிலங்கா உடன்படமறுத்துள்ளது.

நாட்டை பெரும் பொருளாதார நெருக்கடிக்கள் வைத்திருக்கும் சிறிலங்கா அரசு, சிங்கள மக்களிடமிருக்கும் நாசிசத்தை ஒத்த பெரும்பான்மை மனோபாவத்தை நன்கு பாவித்து தமது ஆட்சியை தக்கவைத்து வருகிறது. அதனால் மனித அவலங் களையிட்டோ, மக்களின் அன்றாடப்பிரச்சனைகளையிட்டோ அது அக்கறை கொள்வதில்லை.

அங்கு ஒரு இனப்படுகொலை நடைபெறுகிறது என்பதனை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சர்வதேச சமூகம் மனித அவலங்கள் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக சிறிலங்கா அரசின் யுத்தமுயற்சிகள் வெற்றிபெறும் என்பதில் அவை நம்பிக்கை கொண்டு அதற்கேற்ப காரியமாற்றி வருகின்றன.

இந்நிலையில், தமீழீழ மக்களை இனவழிப்பிலிருந்து காக்கவேண்டிய கடமை உலகத் தமிழரிடமே உள்ளது. இதில் தமிழ்நாட்டு மக்களும் அவர்களை பிரதிநித்துவப்படுத்தும், தலைவர்களும் காத்திரமான பங்கு வகிக்கமுடியும். அடையாள போராட்டங்களுடனும், நிவாரண நிதி சேகரிப்புடனும் அவர்களது பணி முற்றுப்பெறாது என நம்புகிறோம்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன பேப்பரிலை வெளிவந்த ஆக்கங்கள் சில கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தன. தங்கச்சி உங்கட பேப்பரை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகேலாமல் இருக்கு. தலையணைக்குள்ளை மறைச்சு வைச்சுத்தான் எடுத்துப் படிக்கோணும். எண்டு ஒரே பேச்சு. விசயம் இதுதான், 45ம் பக்கத்தில் வெளிவந்த கட்டுரையில் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதை ஒன்றை சேர்த்திருந்தோம். அவர் எப்பேர்ப்பட்ட மனிதர். எனவே நாங்களும் 'பின்நவீனத்துவம்' எண்டு எங்களுக்கு விளங்காத கதையள் கதைக்கிறவைக்கு பிடிக்கும் எண்டு அதைப் போட்டிட்டம்.*

*பேப்பர், புத்தகங்களின்ரை அட்டையிலை சினிமா நடிகையள், பிரபலமான ஆக்கள், பேப்பர் அடிக்கிறவையின்ரை சொந்தக்காரர், சினேகிதர்கள் போன்றோரின் படம்தான் வாறது வழக்கம். ஆனால் நாங்கள் உங்களின்ரை படங்களை அட்டையில் பிரசுரித்து வருகிறோம். அவை மேக்கப் போட்டுக் கொண்டு எடுத்த படங்களில்லை. ஏதேச்சையாக எடுத்தவை என வேதான் வடிவாக இருக்கின்றன. ஆனால் ஒவ்வொருமுறையும் ஆரின்ரேயும் படத்தைப் போட்டால் அவையள் கத்தரின் ஷெற்றா ஜோன்ஸ் கணக்கில் சண்டைக்கு வருவார்கள். கோர்ட்டுக்கு போகப் போறன் எண்டு சொல்வார்கள். இந்த முறை கொஞ்சம் வித்தியாசமாக நடந்திருக்கிறது, தங்களின்ரை படத்தைப் போட்டதற்காக, ஒரு பெரிய சொக்கிளேட் பெட்டியை எங்களது பணியகத்துக்கு கொண்டு வந்து தந்திருக்கிறார் கள் இரு சிறுமிகள். அவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*எங்கட இளசுகளுக்கு எண்டு இரண்டு பக்கம் ஒதுக்கி வருகிறோம். முன்னர் Teens Paper எண்டும் பிறகு areyoutamil.com எண்டும் பெயர் வைச்சோம். அந்தப் பக்கத்தில் பல இளையவர்கள் தங்களது கருத்துக்களை எழுதி வருகினம். நல்ல விசயம். பிரச்சனை என்னெண்டால் அவையள் எழுதிறதை பள்ளிக்கூடத்திலை குடுக்கிற course work களுக்கு நடக்கிற மாதிரி, ஒண்டில் கடைசி நேரத்திலை அரக்க பரக்க கொண்டு வந்து தருவார்கள். அல்லது ஆயிரம் sorry உடன் ஒரு ஈமெயில் அச்சுக்கு அனுப்பிறதுக்கு அஞ்சு நிமிசம் முன்னம் வந்து சேரும். இதாலை எங்கடை இரத்த அழுத்தம் ஏறுகிறதை தடுக்கும் முகமாக கொஞ்சக் காலத்திற்கு அந்தப் பகுதியை நிறுத்தி வைக்கலாம் என முடிவெடுத்துள்ளோம். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு சொல்லுங்கோ.*

*அடுத்த பேப்பர், எம் மண்ணில் விதையாய் வீழ்ந்தவர் நினைவுச் சிறப்பிதழாக வெளிவருகிறது. உங்களது எழுச்சியை கவிதையாய் வடியுங்கள். அவற்றை மறந்து போகாமல் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். (உங்களின் கவிதைகளை, மற்றவர்களின்ரை இல்லை)*

*பின்னை அடுத்த பேப்பரிலை சந்திக்கிறம்.*

***ஒரு பேப்பர்*** காரன்கள்+காரிகள்

# A Sinhala-dominated Sri Lanka is not in India's interest.

Since the 1950s, the goal of India's policy of Sri Lanka was to prevent any hostile power getting a foothold in the neighbourhood. So over the years, India pursued various policies most of them to appease the Sinhalese leadership, at the expense of Eelam Tamil's interest. India's policy since 1991 is to militarily defeat the LTTE because of the Indian Peace Keeping Force (IPKF) debacle, in reality and for the consumption of public and propaganda, and to justify her covert operations, blamed the LTTE for its part in the assassination of Rajiv Gandhi.

Within India, especially after Rajiv Gandhi's assassination, there has been a carefully orchestrated portrayal of the LTTE as the cause of all the troubles on the Island. Definitely that single episode alone cannot be the basis for India Sri Lanka's policy, resulting in the condemning of Eelam Tamils to eternal suffering.

It is now high time that India realized that she cannot afford to remain fixated on its past bitterness with the LTTE, while crafting its response to the ethnic conflict. Sri Lanka being a small Island always has the habit of flirting with other countries for favours, and will always be looking for opportunities to swing over to interests of powers that might seek to contain India in the Indian Ocean region. The current policy stagnation, besides aggravating the difficulties of Eelam Tamils, can also be detrimental to India's security. During the Cold War, there was an anxiety in India as Sri Lanka began a closer relationship with US. Such concerns are irrelevant now, in the light of closer defence cooperation between the US and India.

The ongoing military campaign has an almost genocide streak, with the deliberate targeting of civilian areas mainly aimed to deter civilians from supporting LTTE.

India under the influence of the Indian bureaucracy, led by M.K.Narayanan, and the powerful 'Hindu Media' , has reached an impasse because of its stated policy to safeguard the territorial integrity of Sri Lanka and her unwillingness to recognize LTTE and its standing in the conflict. Unless India overcomes this fixation, the Sinhalese government, will continue to exploit New Delhi and pursue her agenda without any inhibition.

The Sinhalese elite is yet to show any inclination to moderate its unacceptable and unfair racist vision, something unacceptable in the modern and civilized world, for Sri Lanka's future .Frequent uttering by the Colombo's ruling elite that the ethnic minority will have to accept the country as Sinhalese land only, confirms that the ongoing war is not really about defeating the LTTE, but part of a larger strategy to Sinhalicise the entire Island. Sri Lankan government efforts to alter the demographic character of traditional Tamil areas by settling Sinhalese peasants and creating high security zones are mainly to weaken the Tamil resolve. The ongoing military campaign has an almost genocide streak, with the deliberate targeting of civilian areas mainly aimed to deter civilians from supporting LTTE.

"Sinhala Buddhist chauvinism has been institutionalized in Sri Lanka and today it has become more powerful than the politicians themselves .Indeed even if the Sinhala politicians seek to settle the conflict, Sinhala Buddhist chauvinism may try to prevent such a settlement" said Sathasivam Krishnakumar(Kittu) in June 1991. Now it is already an epidemic and the Buddhist chauvinism has spread among all the Sinhalese, the Government, the opposition, the elite, the rich and the poor.

The Tamils already knew and the IC is convinced that the Tamils can never live together with the Sinhalese.

Now that the ethnic conflict has resurfaced as a factor in Tamil Nadu politics, India can ill afford to be seen as actively colluding with the Sinhalese to subjugate the Tamils. There is also growing public sympathy for Sri Lankan Tamils due to the grave humanitarian crisis generated by the military campaign against the Liberation Tigers of Tamil Eelam (LTTE).

Colombo will permanently continue to exploit India in the absence of a buffer that an independent Tamil Eelam could provide. In fact a strong case could be made that an independent Tamil Eelam will not only be in India's interest but permanently avoid exploitation by the by the Sinhalese. Presence of two states in India's southern frontiers will act as a powerful deterrent to both successor states from pursuing policies that are prejudicial to the Indian Navy's predominance in the region.

Unless India makes a course correction, the desperate Eelam Tamils with their powerful expatriate community spread all over the world, may look elsewhere for help. The most prominent foe of India may also respond and then the 'Sacred cow may look a silly cow'. Recently in the political discussion programme, ' Nilavaram' of the NTT, Mr. Yogaratnam said, " We have to do our duty and hope for the best: when we are in trouble an unexpected door will open and we have to use that".

The reality of achieving the Tamil Eelam statehood can be categorized into two major processes. They are physical liberation of Tamil homeland from Sinhala security forces and the other, the international recognition of the Tamil Eelam sovereignty. The Liberation Tigers are discharging their duty as freedom fighters. The Eelam Tamils in SriLanka are helpless. Hence a big responsibility falls on the expatriate Tamils. As an oppressed nation Tamils living abroad, should sell the concept of Tamil Eelam to the IC and convince them that the new state will be a responsible member in future in world affairs and sensitive to the current internal politics. Tamils have to take the message that the only permanent and peaceful solution is a nation for the Tamil speaking Sri Lankans and a nation for the Sinhalese.

In Kilinochi we had almost a de facto state, a beggar less, orderly, peaceful with all the necessary infrastructure and many a learned foreigners from most of the countries, INGO's had a taste of Tamil Eelam and their appreciations and memories will reach the people all over the world, that matter. The IC knows how Sri Lanka lost her place in the Human Rights committee, in spite of India lobbying for Sri Lanka, mainly because of the opinion of three Noble Prize winners.